பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 23 புதன்கிழமை [07-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 191

# வெலிஓயா சென்ற அனுருத்தவை இலக்கு வைத்து பீரங்கித் தாக்குதல்!

## ஆனால் அவர் தப்பினார்

கொழும்பு, ஜூலை 7

வெலிஓயாவில் உள்ள படை முகாம்களைப் பார்வையிடுவதற்காக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த முப்படைத்தளபதிகள் சகிதம் நேற்று மாலை அங்கு சென்ற சமயம் அந்தக் குழுவை இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஆனால் ஜெனரல் ரத்வத்தையோ அல்லது அவருடன் சென்றவர்களோ எதுவித பாதிப்பும் இன்றித் தப்பிவிட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு நிலைமை குறித்து நேரில் ஆராயவும், படை அதிகாரிகளுடன் கலந்துரையாடவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் சகிதம் நேற்றுக் காலை வன்னிக்கான பயணத்தை ஆரம்பித்தார்.

முதலில் மன்னார் சென்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'ரெலிக்கொம்' கோபுரம் செட்டிகுளத்தில் தகர்ப்பு

வவுனியா, ஜூலை 7

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட ரெலிக்கொம் நிறுவனத்தின் தொலைபேசிப் பரிவர்த்தனைக் கோபுரம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

கிராமப் புறப் பகுதிகளுக்குத் தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்காக ஒருகோடியே 50 இலட்சம் ரூபா செலவில் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது என்றும்—

குண்டு வெடிப்பால் கோபுரம் தகர்ந்து வீழ்ந்தது என்றும்—தெரிவிக்கப்பட்டது.

## கிரனேட் வீச்சை அடுத்து உவர்மலையில் தேடுதல்

திருகோணமலை, ஜூலை 7

திருகோணமலையில், உவர்மலை மத்திய வீதியில், மாகாண சபையின் உயர் அதிகாரிகள் தங்கியிருக்கும் குடியிருப்புப்பகுதி மீது நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலை அடுத்து அந்தப் பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் இடம் பெற்றது.

அந்தப் பகுதி மக்களும், அப்பகுதி ஊடாகப் பாடசாலைக்கு சென்ற மாணவர்களும் கண்ணகை அம்மன் கோயிலடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிரமாகவிசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அதேநேரம்— உவர்மலைப் பகுதியில் நேற்று முதல் படையினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## வேலணையில் தொடர்ந்து மாணவர்கள் பகிஷ்கரிப்பு

வேலணை, ஜூலை 7

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாக வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சிரேஷ்ட வகுப்பு மாணவி ஒருவரை அங்கு பணியில் இருந்த சீருடையினர் வழிமறித்து அநாகரிகமாக நடத்தியதாகத் தெரிவித்து அதனை ஆட்சேபிக்கும் விதத்தில் நேற்று முன்தினம் இந்தப் பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'புளொட்' பொறுப்பாளர் விளக்கமறியலில்

வவுனியா, ஜூலை 7

நேற்று முன்தினம் படையினரால் கைதுசெய்யப்பட்ட புளொட் அமைப்பின் பூந்தோட்டம் பிரதேச பொறுப்பாளர் மனோகரன் ரமணன் நேற்று வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை இருவார காலத்துக்கு விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-3-164)

## புலோலியில் தேடுதல்

நெல்லியடி, ஜூலை 7

புலோலி தெற்கு சாரையடிப் பகுதிநேற்று மாலை 6.00 மணிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த படையினரால் திடீரென சுற்றிவளைக்கப்பட்டது.

வீதியில் சென்ற வாகனங்கள் சோதனையிடப்பட்டன. பொதுமக்கள் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர்.

இதன் காரணமாக அங்கு சிறிதுநேரம் பதற்றம் நிலவியது.

[உ-109]

## மாங்குளத்தில் புலிகள் தாக்குதல்

வவுனியா, ஜூலை 7

மாங்குளம் முன்னணி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததாகப் படைத்தரப்பு தெரிவித்தது.

(உ-3-164)

## இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 7

கொழும்புத்துறையைச் சேர்ந்த பரமசாமி குசேலராஜா (வயது 44) என்பவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர் கைது செய்யப்பட்டமை தொடர்பான ரசீது படை அதிகாரிகளால் உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இவரது கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப் பதிகாரி படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர். (உ-3)

### புலிகள் ஆதரவாளராம்!

## தொண்டாவுக்கு எதிராக சிங்கள அமைப்பு வழக்கு

கொழும்பு, ஜூலை 7

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் அதன் தலைவர்கள் சிலருக்கும் எதிராக பயங்கரவாத இயக்கத்துக்கு எதிரான அமைப்புஅடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுக்கு உட்பட்ட நிறுவனங்களில் உயர் பதவி நியமனம், இடம்மாற்றம்என்பவற்றில் இலங்கைத் தொழிலா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தந்திரிமலையில் நேற்று பஸ் ஒன்று எரிப்பு!

### 2 பயணிகள் குறித்துத் தகவல் இல்லை

கொழும்பு, ஜூலை 7

அநுராதபுரம் மாவட்டத்தில் தந்திரிமலை என்னும் இடத்தில் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

மதவாச்சியில் இருந்து தந்திரிமலைக்குச் சென்றுகொண்டிருந்த இந்த பஸ் தந்திரிமலைக்குச் சமீபமாக சின்னச் செட்டிக்குளம் என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாதோரால் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டுமறிக்கப்பட்டது என்றும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனத்துடன் சேர்த்து பயணிகள் நால்வர் எரிப்பு

### பிபிலை வீதியில் பயங்கரம்

அம்பாறை, ஜூலை 7

கொழும்பில் இருந்து அம்பாறை நோக்கி பிபிலை வீதி வழியாகச் சென்ற இரு வாகனங்கள் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வழிமறிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டதுடன் அவற்றில் பயணம் செய்த நால்வர் அந்த வாகனங்களில் போட்டு எரிக்கப்பட்டனர்.

ரத்மல்கஹவெவ என்னும் இடத்தில் டொல்பின் ரக வாகனம் ஒன்று வந்துகொண்டிருந்த சமயம் இனந்தெரியாத குழு ஒன்று வாகனத்தை மறித்து, சாரதி உட்பட

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுமக்கள் மீது தாக்குதல்:

## தாவடிச் சம்பவத்துக்கு நடவடிக்கை எடுக்க உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 7

தாவடிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் தாக்கப்பட்டதாகக்கூறப்படும் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக 51 ஆவது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் மாரம்பே உறுதி அளித்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழு யாழ். இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் நேற்றுஅவரைச் சந்தித்த சமயமே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான பாதை குறித்து புலிகள் விடுத்த செய்தி

வவுனியா, ஜூலை 7

''வன்னிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வருவதற்கான பாதை மூடப்பட்டதால் அவல நிலையில் உள்ள மக்களுக்கு உதவும் முகமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பாதை ஒன்றைத் திறப்பதற்கு முயற்சி மேற்கொண்டது. வவுனியா — மாங்குளம் வீதியூடாக இந்தப் பாதையைத் திறக்கநாம் சம்மதம் தெரிவித்துள்ளோம்.''

விடுதலைப் புலிகளின் அர

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# காரைநகர் கடற்படை தள பிரதேசம் அளவிடும் பணி விரைவில் ஆரம்பம்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க

யாழ்ப்பாணம், ஜூலை 7

காரைநகர் கடற்படைத் தள விஸ்தரிப்புக்காக அரசினால் சுவீகரிக்கப்பட்ட அப்பகுதியில் உள்ள 30.34 ஹெக்டேயரைக் கொண்ட பிரதேசம் நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

131 பொது மக்களுக்குரிய காணித் துண்டுகளைக் கொண்ட இப் பிரதேசம் 1988, 8 காலப் பகுதியில் முதன்முதலாக அளவீடு செய்யப்பட்டது.

இந்தக் காணித்துண்டுகளுக்குரியவர்களில் சிலருக்கு ஒரு கட்ட நஷ்டஈடு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அது பற்றிய புள்ளி விவரங்களைப் பெற முடியவில்லை.

1984 ஆம் ஆண்டிற்குப் பின் இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இங்கிருந்த மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தைச் சுவீகரிப்பது தொடர்பாகத் திட்டமிடப்பட்டது.

இந்தக் காணி சுவீகரிப்புத் திட்டத்தில் இதுவரை நஷ்டஈடு கிடைக்காதவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நோக்குடன் மீண்டும் இப்பிரதேசம் அளவீடு செய்யப்படவுள்ளது எனத்தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக இப்பிரதேசத்தை அளவீடு செய்யுமாறு யாழ். நில அளவைத் திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ-5)

# களுத்துறைச் சிறையை அண்டியபகுதியில்தேடுதல்

கொழும்பு, ஜூலை 7

களுத்துறை மற்றும் ஜாவத்தைச் சிறைச்சாலைகளை அண்டிய இடங்களில் நேற்று முன்தினம் விசேட பொலீஸார் தேடுதல் மேற்கொண்டனர்.

இந்த சிறைச்சாலைகளுக்கு அண்மையில் உள்ள கிராமங்களும் மற்றும் சிறைச்சாலைகளுக்குச் செல்லும் வீதிகளும் சோதனைகளுக்கு உள்ளாகின்றன.

வீதித் தடைகள் அமைத்து வாகனங்களையும் படையினர் சோதனைக்கு உட்படுத்தினர்.

விடுதலைப் புலிகள் வன்செயல்களில் ஈடுபடலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று களுத்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார், [இ-க-8]


## றேடியன்ற் இன்ஸ்ரிரியூட்

கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

**A/L கணக்கீடு - புதிய பிரிவு**

2001 - பிற்பகல் 3.00 மணி
2000 - பிற்பகல் 4.00 மணி

by S. Col!ins (B.B.A)

ஆரம்பம்: 10 – 07 – 1999 சனிக்கிழமை

★ அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும். ஏனைய கலை, வர்த்தகப் பிரிவுகள் வழமைபோல் நடைபெறுகின்றன.

– நிர்வாகி

(67250)



## விற்பனைக்கு உண்டு

புதிய Fax மெஷின், சீலிங்பான், ரேபிள் பான் CD டிஸ்க் பிளேயர் செட், கோழிகளுக்கு சொண்டு வெட்டும் மெஷின் என்பன விற்பனைக்கு உண்டு.

**குறிஞ்சி பார்மஸி**

எட்னா சொக்கலட் விநியோகஸ்தர்
558, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (67240)


## இணுவில் கந்தசுவாமி கோயில்

வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்ட

## சைவசமய அறிவுப்போட்டி 1999

காலம்: 10 - 07 – 1999 சனிக்கிழமை
காலை 9.00 மணி [புதியநேரம்]

மேற்படி பரீட்சைக்கு பாடசாலைகள் மூலம் விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதிச் சுட்டெண்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதிச் சுட்டெண்களை இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

பரீட்சைக்குழு,
இந்துசமய வளர்ச்சிச் சங்கம்,
இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை
(சி/8105)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி சாந்தினி வரதரட்ணம்
அவர்களின் அன்புத் தந்தையார்

**சி. கதிர்காமத்தம்பி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா / சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை,
நீர்வேலி. [67241]

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலைகள் மட்டத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக நடத்தி வரும் முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்குத் தொடரில் செங்குந்தா இந்துக் கல்லூரியில் இன்று கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்குகள் மாணவர்கள் மத்தியில் சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும் முரண்பாடற்ற மாணவ சமூகத்தை உருவாக்குவதற்கு மாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-6)


**புலமைப்பரிசில் வினாத்தாள்கள்**

கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டவை

★ தொகுதி I
★ தொகுதி II

(மிகக் குறைந்த விலையில்) விற்பனைக்கு வந்துவிட்டது.

BOND யாழ் நகர். (67245)



**நாகம்ஸ்**
சுன்னாகம்

கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த

**ஜீன்ஸ்**
(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[67247]



**ராஜா**
யாழ்ப்பாணம்

38 ஆவது நாளாக
விஜய், தேவயானி,
ரம்பா. மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த

**நினைத்தேன் வந்தாய்**

10.30 2.30
[சி/8038]


# பெண்களின் ஆற்றல் மேம்பாட்டுக்கு பயிற்சி வகுப்புக்கள் ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 7

பெண்கள் அமைப்புக்களில் உள்ளவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன் யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் ஒரு மாதகாலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிநெறி எதிர் வரும் 10 ஆம் திகதி திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 18 பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் பெண்கள் ஆய்வு அபிவிருத்தி நிறுவனங்களைச் சேர்ந்த 30 பெண்கள் இந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொள்வர். (உ-5)

# அனுமதிப்பத்திரம் பெறாமல் மரம் எடுத்துச் செல்லத் தடை

## மேலதிக அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். மாவட்டத்தில் எந்த வகை மரங்களாக இருந்தாலும் பிரதேச செயலரின் அனுமதிப் பத்திரம் இன்றி வீதியால் கொண்டுசெல்ல முடியாது என்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் எந்த வகையைச் சேர்ந்த மரமாயினும் அல்லது அரிந்த பலகையாயினும் வீதியால் கொண்டு போகும்போது பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உடன் கொண்டுசெல்லப்பட வேண்டும்.

அரச காணிகள், பொது வீதிகள் மற்றும் அரசாங்க தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் உள்ள மரங்கள் தறிக்கவேண்டிய தேவையோ அல்லது அப்புறப்படுத்தப்பட வேண்டிய தேவையோ ஏற்படின் அவ்வப் பிரதேச செயலரின் சிபார்சுடன் மரக்கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளரே அவற்றைப் பொறுப்பேற்க வேண்டும்.

—இப்படி அந்தக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் தம்பிமுத்து

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் தம்பிமுத்து அவர்கள் 6-7-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் நாகமுத்து காலஞ்சென்ற இளையதம்பி வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நாகலிங்கம், காலஞ்சென்ற விசுவலிங்கம், தர்மலிங்கம் (சுவிஸ்), சண்முகநாதன் (சாவ. ப. நோ. கூ. ச.), தங்கம்மா, அன்னம்மா, செல்லம்மா, நாகம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-7-99) பி.ப. 12.30 க்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கு மட்டுவில் வடக்கு ஊரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
த நாகலிங்கம்
(மகன்)

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(67243)

## சிவப்பிரகாசம் கதிர்காமத்தம்பி

(ஓய்வுபெற்ற பரிசோதகர், இலங்கை போக்குவரத்து சபை)

கருகம்பானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புன்னாலைக்கட்டுவனை தற்பொழுது வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் கதிர்காமத்தம்பி அவர்கள் 5-7-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம்-குஞ்சரப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் ஜெயபாலன் (நிதி முகாமையாளர், அஸ்பெற்றேஸ் சிமெந்து லிமிட்டெட்), ஜெயக்குமாரி, சாந்தினி (ஆசிரியை, சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை), கமலினி(ஆசிரியை, ஊரெழு கணேச வித்தியாசாலை), ரகுவேனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தனபாலன் (உதவிப் பொது முகாமையாளர், இலங்கை மின்சாரசபை), மேனகா, வரதரட்ணம் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் K. K. S), பாலசுப்பிரமணியம் (ஆசிரியர்), ஆனந்தகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் சிவசண்முகநாதன், சரஸ்வதி (கனடா), திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லத்துரை (கனடா), அன்னபூரணம், ரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலாபன், லட்சியா, மகிழ்யா, அபிராமி, கஜானன், கஜநினி, சஞ்சிகா, டிசாரட்ணம், நிவேதா, மிதுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவனில் உள்ள இல்லத்தில் இன்று (7 - 7 - 99) புதன் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. தங்கம்மா (மனைவி)
எஸ். வரதன் (மருமகன்)

டிஸ்பென்சறி லேன்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
புன்னாலைக்கட்டுவன்.
(67235)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி ஊடுருவல்காரர் உள்ளவரை இந்தியாவின் தாக்குதல் தொடரும்!

## வாஜ்பாய் அறிவிப்பு

புதுடில்லி ஜூலை 7

இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ள படைகளை வாபஸ் பெற பாகிஸ்தான் அதிபர் நவாஸ் ஷெரீப் இணங்கியுள்ளபோதும், கடைசி ஊடுருவல் காரர் இருக்கும் வரை இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட மாட்டாது என்று இந்தியா அறிவித்துள்ளது.

அதே சமயம் இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ள படைகளை வாபஸ் பெறுவது தொடர்பாக தமக்கும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதில் அளித்த வாஜ்பாய் பாகிஸ்தானின் கடைசித் துருப்பு இந்தியாவில் இருக்கும் வரை தமது நடவடிக்கை தொடரும் என்றும் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் கூறியுள்ளார்.

சர்வதேச சமூகத்தை ஏமாற்ற பாகிஸ்தான் இந்த முடிவுக்கு வந்துள்ளது என்றும் —

எந்தக் காரணம் கொண்டும் தமது நடவடிக்கையை நிறுத்தப் போவதில்லை என்றும் — இந்திய வெளிவிகார அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

''ஊடுருவல் காரர்களை விரட்டும் நடவடிக்கையை படையினர் தீவிரமாக்கியுள்ளனர். எமது எல்லைக்கோடு வரை பாகிஸ்தான் படைகளை விரட்டும் வரை நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்'' என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் புலிக்குன்றைக் கைப்பற்றிய வெற்றித் தாக்குதலை அடுத்து அருகில் உள்ள மலைச் சிகரங்களில் நிலைகொண்டுள்ள ஊடுருவல்க்காரர்களைத் தாக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் நிரந்தரமாக படைகளை நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். [இ-3]

# போர் நிறுத்த யோசனை எதனையும் இந்தியா பரிசீலனை செய்யவில்லை

புதுடில்லி, ஜூலை 7

கார்கில் பகுதியில் ஊடுருவி இருக்கும் பாகிஸ்தான் ஆதரவு ஊடுருவல்காரர்கள் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தினர் ஆகியோர் மீதான தாக்குதல்களை நிறுத்துவது குறித்து எந்த யோசனையையும் இந்தியா பரிசீலிக்கவில்லை என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

கார்கில் பகுதியில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்றவாறே இந்தியாவின் நடவடிக்கைகள் தொடரும் என்றும் —

எல்லைப் பகுதியில் பதற்றத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பது குறித்து கிளின்ரன்— நவாஸ் ஷெரீப் கூட்டறிக்கையில் கூறப்பட்டிருப்பதன் அர்த்தம் இந்திய எல்லையில் இருந்து பாகிஸ்தான் படைகள் வாபஸ் பெறப்படுதல் வேண்டும் என்பதே என்றும்—

அனைத்துத் தீவிரவாதிகளும் வாபஸ் பெறப்பட்ட பின்பே இந்தியாவின் அடுத்த நடவடிக்கை தொடரும் என்றும்— இந்தியா அறிவித்துள்ளது.

அதே சமயம் இந்திய— பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நிலவும் பதற்றத்தைக் குறைப்பது பற்றி அமெரிக்க அதிபர் கிளின்ரனுக்கும் பாக். பிரதமர் ஷெரீப்புக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின் பின்பு வெளியிடப் பட்ட கூட்டறிக்கை குறித்து சருத்துத் தெரிவித்த. இந்திய வெளியுறவுச் செயலக அதிகாரி ஒருவர் வாய்மொழியான உறுதி மொழிகள் எதனையும் இந்தியா ஏற்காது என்று கூறி உள்ளார்.

அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்று ஊடுருவல் காரர் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தினரை பாகிஸ்தான் விலக்கிக் கொள்ளும் என இந்தியா நம்புவதாகவும் கார்கிலில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாக இந்தியா கவனித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-க)

உலக அரங்கில்

## மோதல்

ஜகார்த்தா, ஜூலை 7

இந்தோனேசியாவில் உள்ள எரியன்யாவ மாவட்டத்தில் அமைந்துள்ள நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த போராளிகள் அங்கு தமது அமைப்பின் கொடியை ஏற்றியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அரச படையினருக்கும், போராளிக் குழுக்களுக்கும் இடையில் சண்டை மூண்டது.

இந்தச் சண்டையில் பேராளி ஒருவர் உயிரிழந்தார் 19 போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## இஸ்ரேல் பிரதமர் இன்று பதவி ஏற்கிறார்

ஜெருஷலேம், ஜூலை 7

இஸ்ரேலின் புதிய பிரதமராக எகுட்பராக் இன்று பதவி ஏற்கிறார்.

இதேவேளை — மத்திய கிழக்கில் 50 ஆண்டு காலமாக நிலவி வரும் பூசலை முடிவுக்குக் கொண்டு வர தாம் முயற்சி எடுக்கப் போவதாகவும்—

சிரியா மற்றும் பலஸ்தீனத்துடனான அமைதிப் பேச்சு வார்த்தைகளுக்கு முதலிடம் அளிக்கப்படும் எனவும்—

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேலிய இராணுவத்தை விலக்கிக் கொள்வது தொடர்பாக பரிசீலிக்கப்படும் எனவும் எகுட் பராக் தெரிவித்துள்ளார். (இ-க)

# ஷெரீப்புக்கு எதிர்ப்பு வலுக்கிறது; ஊடுருவல்காரர் வாபஸ் பெற மறுப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 7

இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ள படைகளை வாபஸ் பெற நடவடிக்கை எடுப்பதாகப் பாகிஸ்தான் பிரதமர் அமெரிக்க ஜனாதிபதிக்கு உறுதிமொழி வழங்கியமைக்குப் பாகிஸ்தானில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

எமது நாட்டை அடகு வைத்துவிட்டார் நவாஸ் ஷெரிப் என்று தீவிரவாத அமைப்புக்கள் குரல் எழுப்பியுள்ளன.

''நவாஸ்ஷெரிப்பின்கோரிக்கைப்படி இந்தியாவில் ஊடுருவியுள்ள எமது குழுவினர் வாபஸ் பெறமாட்டார்கள். தொடர்ந்து இந்தியப் படையுடன் சண்டை இடுவோம்'' என்று தீவிரவாத அமைப்பு ஒன்றின் தலைவர் அப்துல்லா மஞ்சுக்கார் தெரிவித்துள்ளார்.

மற்றொரு தீவிரவாதக் குழு பாகிஸ்தானின் சகல நகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளது.

கடைகள், அரச அலுவலகங்களை மூடப்போவதாகவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமருக்கு எதிராகப்பல நகரங்களில்வன்செயல்களும் இடம்பெற்றுள்ளன.

வன்செயல்கள் தீவிரமாகும் என்று தீவிரவாதிகள் அரசை எச்சரித்துள்ளனர்.

அதேநேரம் — தீவிரவாதிகளுடன் தமக்கு நல்லுறவு உண்டு என்றும்—

அவர்களுடன் பேசி அவர்களை வாபஸ் பெறச் செய்ய முடியு என்றும் — பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-3]

## தீ விபத்தின் சூத்திரதாரிகளான
# 6 அரச அதிகாரிகள் தென் கொரியாவில் கைது

சோல், ஜூலை 7

தென் கொரியாவின் தலைநகர் சோலில் உள்ள கோடைகால விடுதி ஒன்றில் கடந்த வாரம் ஏற்பட்ட தீ விபத்தின் சூத்திரதாரிகள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு அரச அதிகாரிகள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த விடுதி பாதுகாப்பு நியமனங்களுக்கு உட்படாத போதிலும் விடுதியில் தங்குவதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கியிருந்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

இந்த அதிகாரிகள் இலஞ்சம் பெற்றுக் கொண்டு அனுமதிப் பத்திரங்களை வழங்கினார்களா என்பது பற்றிய விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்தத் தீவிபத்தில் 23 குழந்தைகள் உயிரிழந்ததுடன் பலர்காயமடைந்ததும் தெரிந்ததே. (இ-க)

## ஊடுருவல்காரர் மீது எமக்கு கட்டுப்பாடு கிடையாது
### பாக். அதிகாரி தெரிவிப்பு

காஷ்மீர் பகுதியில் சண்டையிட்டு வரும் ஊடுருவல்காரர் மீது எமக்கு கட்டுப்பாடு எதுவும் இல்லை — ஆயினும் தீவிரவாதிகளுடன் பாகிஸ்தான் நல்லுறவு வைத்திருப்பதால் அவர்களுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் தயாராக இருக்கின்றது.

இப்படி பாகிஸ்தானிய அதிகாரியான லியான் குர்ஷிஸ் முகமத் கஸ்தூரி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் நிலையை எடுத்துரைக்கு முகமாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் பயணம் மேற்கொண்டுள்ள லியான் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கே மேற்படி இதனைத் தெரிவித்தார். [இ-க]

## பின்லேடனின் புதியமுகாம்

சவூதி அரேபியாவின் கோடீஸ்வரரான ஒஸாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில் புதிய முகாம் ஒன்றை அமைத்திருப்பதாகக்கூறப்படுகின்றது.

பாகிஸ்தான் எல்லைக்கு அருகே கிழக்கு ஆப்கானிஸ்தானின் ஜலலாபாத் நகருக்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மலைப் பிரதேசப் பகுதியிலேயே பின் லேடனின் புதிய தளம் அமைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அடிக்கடி தனது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டு வருகிறார் பின் லேடன்.

நைரோபியில் அமெரிக்கத் தூதரகத்தின் மீது நடத்தப் பட்ட குண்டுத் தாக்குதலுக்கும் பின்லேடனுக்கும் தொடர்பு உண்டு எனக் கருதப்பட்டு இவர் அமெரிக்காவினால் தேடப்பட்டு வருவது தெரிந்ததே. (இ-க)

## கடத்தப்பட்டார்

பாகிஸ்தானுக்கான இந்திய தூதரக அதிகாரியும் அவரது பாதுகாவலரும் பாகிஸ்தான் உளவுப் பிரிவினரால் கடத்திச் செல்லப் பட்டுள்ளனர்.

தூதரக அதிகாரியும் காவலாளரும் கடத்தப்பட்டது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. [க]


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள் (10-07-1999) சனிக்கிழமை ரோகிணி நட்சத்திரமும் கடக லக்கினமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.00 -க்கு மேல் 8.45 மணிக்குள் [ பழைய நேரம் ] வரும் சுப முகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**மகிந்தராஜ்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறைசெல்வி
**புவி அரசி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் திருமண மண்டபத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி சதானந்தன்
'சுகஸ்தான்'
சங்குவேலி,
மானிப்பாய்.

திரு. திருமதி நடராசா
'இராசயோகம்'
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(இருவீட்டார் அழைப்பு) (67238)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சிவநாதன் றஜீவன் என்பவருடைய தேசி, விசேட அடையாள அட்டைகள் (781651478V-0902007894) 5—7—99 அன்று புத்தூர்ச் சந்திக்கும் வேம்பிராய்ச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அனுசா பந்தல் சேவை, கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [67227]

## இலகு திருமண சேவை

1966 அவிட்டம் PHD Engineering Norway University மணமகனுக்கு Professional B,Sc, தரத்தில் மணமகள் தேவை. Sponser உண்டு. தொடர்பு: ஞாயிகளில் துரைவிமலா, கே. கே. எஸ். தி, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (62231)

## தேவை

Sri Ram Honda 650 ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: எஸ். சதாஸ், 105, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (67211)

## மணமகள் தேவை

இந்து கௌரவமான குடும்பம் வயது 42 நட்சத்திரம் அத்தம், சுவிற்சர்லாந்தில் வேலை செய்யும் மணமகனுக்குப் படித்த அழகுள்ள மணமகள் தேவை. Sponser மூலம் அழைக்கப்படும். சாதகம் பிறந்த நேரம் குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 906, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [67195]

## விற்பனைக்கு

3 பரப்பு காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் வீட்டுத் தளபாடகள், காஸ் சிலிண்டர், மின்விசிறி, கோழிக் கூடு என்பனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இ. இராசகுமார் 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [67208]

## SPOKEN ENGLISH

வெளிநாடு செல்பவர்களுக்கும் வங்கி அலுவலக ஊழியர்களுக்கும் பட்டதாரி மாணவர்களுக்கும் முப்பது நாள்களில் ஆங்கிலம் பேசக் கற்பிக்கப்படும். நேரம்-காலை மாலை, மதியம் தினமும். ஆசிரியர். 85 சிவன் கோயிலடி. சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (67150)

## ரீ.விகள் விற்பனைக்கு

2030, 2060, 2032 மற்றும் 27'' Sony, National ரீ.விகள் விற்பனைக்குண்டு. (மிகவும் மலிவானவிலையில்) எஸ். சதாகரன், மூளாய் றோட், மத்தியூஸ் லேன், சுண்டுக்குளி. (66978)

## யாழ்ப்பாணம்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் 2 யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுப்பு எங்கள் இன்றைய வாழ்வைச் சித்திரிக்கும் 7 நாடகங்களும் 10 சிறுகதைகளும் ஐந்து கட்டுரைகளும். 50/- (67024)

## மாறிவிட்டது

28-06-99 அன்று நயினாதீவிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை சென்ற பஸ்ஸில் கம்பஸ் பாக் ஒன்று மாறுதலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாறி எடுத்தவர்கள் ஆதாரத்துடன் திரு. சி. செல்வரத்தினம், [இளைப்பாறிய ஆசிரியர்] சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (67212)

# பாடசாலையில் திருட்டு

அரியாலை, ஜூலை 7

கொழும்புத்துறை சென். ஜோசப் மகாவித்தியாலயத்தில் திருட்டு இடம்பெற்றுள்ளது.


கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வித்தியாலய யன்னலை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கு இருந்த 20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

விளையாட்டு உபகரணங்கள், கல்வி உபகரணங்கள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (இ-17-30)

## தரமான நிழற்பட பிரதிகள்

Photo copy

குறைந்த விலையில்



A-4 அளவு ரூபா 2.50 மட்டுமே


அடையாள அட்டைகள்

கவரிடுதல் (Lamination)

அருணஸ்

361, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்




குதிகால் வெடிப்புக்களுக்கு விரைவாக நிவாரணம்

அளிக்கிறது க்ராக் க்ரீம் மட்டுமே.




குதிகால் வெடிப்புக்கு விசேஷமான நிவாரணம்

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்

ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பபாணம்.

மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைக்ள், சில்லறை கடைகள்.

(சி/8052)

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட

வெளிநாட்டு உருளைக்கிழங்கு கிலோ 40/-

குடாநாட்டு மக்களின் நன்மை கருதி மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் குளிர்சாதனப் பெட்டிக்குரிய காஸ் சிலிண்டர்,

❖ ரெலிபோன், ❖ யுனிற்செற், ❖ பக்ஸ்மெசின், ❖ T. V., ❖ அப்பிள், ❖ ஒரேஞ், ❖ ஐஸ்கோண், ❖ கோழித்தீன், ❖ மாட்டுத்தீன், ❖ பிளாஸ்ரிக் தும்புத்தடி, ❖ ஒறியன் ரொபி வகைகள் மற்றும் ❖ தும்பினாலான கால் மிதிவகைகள்

என்பனவும் எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நாதன் ஸ்ரோர்ஸ்

213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T. P. 2916 [67238]

## 21 ஆம் நாள் ஆத்மாஞ்சலி



அமரர் முருகேசு வல்லிபுரம்

(வல்லிக்கோன்)

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், K K. S.)

எம் கழக உறுப்பினரும் சிறந்த கரபந்தாட்ட வீரருமான அன்னாரின் ஆத்மா இறைநிழலில் இன்புற்றிருப்பதாக.

ஓம் சாந்தி!

இந்து விளையாட்டுக் கழகம், இணுவில்.

[67230]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருமைத்துரை அகிலதரன்

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 02 – 03 – 1974 | 14 – 07 – 1997 |
| கோண்டாவில் | பிரான்ஸ் |

திதி: 07 – 07 – 1999

ஒரு பொழுதும் உமை மறவோம்!

அருமையுடன் பெற்றெடுத்த
அகிலதரன், எம்கொழுந்தே!
பெருமைபெறு பேரொளியாய்ப்
பெற்றோர்கள் நாம் மகிழத்
திருவுடனே நீர் வருவீர்
என்றிருந்தோம், செயலற்றோம்
ஒருபொழுதும் உமைமறவோம்
உமாபதிதாள் சேர்ந்தனையே!

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
க. அருமைத்துரை,
சிவயோகமலர்
(பெற்றோர்).

ஸ்ரீநாகபூஷணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(87201)

# ப. நோ.கூ.ச. மூலம் உருளைக்கிழங்கு

அரியாலை, ஜூலை 7

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சமாசம் ஹண்டி கப்பலில் ஒரு தொகுதி உருளைக்கிழங்கைத் தருவித்துள்ளது.

இந்த உருளைக்கிழங்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டதாக சமாசத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கிலோ 55 ரூபா விலையில் இந்த உருளைக்கிழங்கு வழங்கப்பட்டு வருவதாகவும் சமாசத் தலைவர் தெரிவித்தார்.

(இ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெடுந்தீவில் இருந்து

# கால் நடைகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல இருந்த தடை நீக்கம்

நெடுந்தீவு, ஜூலை 7

நெடுந்தீவில் இருந்து வெளி இடங்களுக்கு கால்நடைகளை கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது

நெடுந்தீவு கால் நடை வளர்ப்போர் சங்கம், விவசாயிகள் சங்கம் மற்றும் பொதுத்தாபனங்கள் கால் நடை ஏற்றுமதித்தடையால் உள்ள கஷ்டங்கள் குறித்து யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டிருந்தன.

தாம் கடற்படைத் தளபதியுடன் தொடர்பு கொண்டதாகவும் கால்நடை ஏற்றுமதித் தடையை அவர் நீக்கி உள்ளதாகவும் நெடுந்தீவு பிரதேச சபைக்கு டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-111]

## மருத்துவ மனையை தரமுயர்த்தக் கோரிக்கை

அளவெட்டி, ஜூலை 7

அளவெட்டி மத்திய மருந்தக மகப்பேற்று மருத்துவ மனையை கிராமிய ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்துமாறு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை அளவெட்டியிலுள்ள பொது அமைப்புகள் கோரியுள்ளன.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், ஆலய பரிபாலன சபையினர் தொண்டர் சபையினர், விவசாய சம்மேளனங்கள் ஆகியன பணிப்பாளர்களுக்கு இது தொடர்பாக மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கந்தரோடை, மாகியம்பதி, சண்டிலிப்பாய் போன்ற பகுதிகளில் சுமார் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இந்தக் குடும்பங்கள் சிகிச்சை பெறுவதற்கு அளவெட்டி மத்திய மருந்தக மகப்பேற்று மருத்துவமனை ஒன்றே உதவி வருகின்றது.

அத்துடன் இந்த மருத்துவ மனையைத் தரமுயர்த்தத் தேவையான வசதிகளையும் இது கொண்டுள்ளது. வெளி நோயாளர்கள் பிரிவுக்கென புதிய கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

புதிய காணி ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எனவே மத்திய மருந்தக மகப்பேற்று மருத்துவ மனையை கிராமிய ஆதார வைத்திய சாலையாகத் தரமுயர்த்தித் தருமாறு கோருகின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் அரசாங்க அதிபர், பிரதேச செயலர், வலி. வடக்கு, பிரதேச சபைத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-13)

## மீன் விலை அதிகரிப்பு

அரியாலை, ஜூலை 7

யாழ். நகரில் மீன் விலை அதிகரித்துள்ளது.

பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை, கொட்டடி போன்ற சந்தைகளில் கடந்த சில நாள்களாக மீன் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

(இ-17)

# மரபு சார்ந்த தமிழ்ப் புலமையின் படிமமாக விளங்குபவர் பண்டிதமணி

### நூற்றாண்டு நிகழ்வில் பேச்சு

திருநெல்வேலி, ஜூலை 7

கடந்த நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் தொடக்கி வைத்த சமய, இலக்கிய, தமிழ்ப் பணியை இந்த நூற்றாண்டுக்குக் கொண்டுவந்து எமது சமூகத்துக்குப் பெரும் தொண்டாற்றியவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை. அவர் ஒரு வரலாற்றுப் பாத்திரம். அவரை ஈழத்தின் மரபு சார்ந்த தமிழ்ப் புலமையின் படிமம் ('இமேஜ்') என்றும் கூறலாம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நூற்றாண்டு நிறைவு வைபவ அங்குரார்ப்பண விழா கடந்த மாதம் 27 ஆம் திகதி ஞாயிறு பிற்பகல் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் மேற்கண்டவாறு கூறினார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் பண்டிதமணியின் உருவப்படம் வண்ணை சாந்தையர் மடம் விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையை அடுத்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டது.

பண்டிதை பொன். பாக்கியம்தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

பண்டிதமணியின் எல்லா எழுத்துக்களும் சமூக ஒழுக்கத்துக்கே முக்கியத்துவம் கொடுப்பனவாக அமைந்துள்ளன. ஒழுக்கத்தைப் பாதிக்கும் இலக்கியத்தைத் தூக்கி எறிய வேண்டும் என்று கருதும் காலம் இன்று ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை மையப்படுத்திக் கந்தபுராண கலாசார பரம்பரை நாவலர் ஐயாவின் வழியில் பண்டிதமணிகாலத்திலும்தொடர்ந்து இன்றுவரை நிலவி வருகின்றது.

மகாபாரதம், கம்பராமாயணம் ஆகியவை யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுடன் இணைந்து கொள்வதற்குப் பண்டிதமணியின் சிந்தனைகளும் எழுத்துக்களும் முக்கிய காரணம் எனலாம்.

**பண்டிதமணியின் சைவ சித்தாந்தம்**

பண்டிதமணியின் பார்வையில் சைவ சித்தாந்தம் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் மட்டுமன்றி அனைத்து இந்திய பரப்பிலும் பரந்து நின்றது. ஆரியமும் தமிழும் இரண்டு கண்கள் போன்வை என்று சைவ சித்தாந்தம் பற்றிய தமது கருத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தக் காலகட்டத்தில் தென் இந்தியாவில் குறிப்பாசத் தமிழ்நாட்டில் பிராமண எதிர்ப்புப் பிரசாரங்களும், சமஸ்கிருத மொழிக்கு எதிரான போக்கும் தீவிரமாக இருந்தன.

இலக்கியத்தையும் மதத்தையும் வேறுபடுத்திப் பார்க்காத பண்டிதமணி இலக்கியம் படைப்பதற்கு இறை அருள் தேவை என்பதில் அசையாத நம்பிக்கையுடையவராகக் காணப்படுகின்றார். ஆனால் 20 ஆம் நூற்றாண்டில் இலக்கியத்தை இலக்கியமாகப் பார்க்கவேண்டும்; இலக்கியம் மதத்தின் சேவகன் அல்ல என்ற கருத்தும் ஏற்பட்டது.

சங்க இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்த பண்டிதமணி தமது மாணவர்களுக்கு அவற்றின் சிறப்புக்களையும் பெருமைகளையும் நன்கு ஊட்டி வளர்த்தவர். அதேவேளை மேலைநாட்டுப் படைப்பாளி, ஷேக்ஸ்பியர், தத்துவஞானி பிளேட்டோ போன்றவர்கள் பற்றியும் நன்கறிந்து கொண்டவர்—என்றார்.

**நல்ல மாணவர் பரம்பரை**

பண்டிதை பொன். பாக்கியம் தமது தலைமை உரையில் கூறியதாவது:

ஒரு நல்லாசிரியர் இருப்பாரானால் நல்ல மாணவர்களும் தோன்றுவார்கள் என்ற கருத்துக்கிணங்கப் பண்டிதமணி ஐயா அவர்கள் உருவாக்கிய மாணவர் பரம்பரை இன்றும் எமது மத்தியில் சைவத்துக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் பண்பாட்டுக்கும் சேவையாற்றிக்கொண்டு இருக்கின்றது. அன்று ஆசிரியரிடம் வாயைப் பொத்திக் கொண்டு கதைத்தார்கள் மாணவர்கள். இன்று வாயைப்பிளந்துகொண்டு பல மாணவர்கள் கதைப்பதை அவதானிக்க முடிகின்றது.

திருநெல்வேலி சைவ ஆசிரியகலாசாலையில் மட்டுவிலில் இருந்துவந்த மகா சமுத்திரம் ஒன்று சைவத்தையும் தமிழையும் ஊட்டி வளர்த்தது. கல்வியை வியாபாரமாகக் கருதி ஆசிரிய சமூகத்தில் இன்று பலர் தொழிற்படுகையில் அன்று சமுதாய நலன் கருதிக் கல்விச் சேவையை ஆற்றிய பண்டிதமணி என்றும் எம்மத்தியில் எமது நெஞ்சங்களில் — வாழ்வார் என்பதில் சந்தேகமில்லை. எமது எதிர்கால சந்ததி இவரின் சேவைகளை அறிந்து பின்பற்ற இந்த நூற்றாண்டு விழா பெரிதும் உதவும் என்பது எமது நம்பிக்கை.

இப்படி அவர் கூறினார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் செயலாளர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் நன்றியுரை நிகழ்த்துகையில்—

இந்த நூற்றாண்டு விழாவை மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கொழும்பு ஆகிய பல்வேறு இடங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, பண்டிதமணியின் முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கும் அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நூல்களாக வெளியிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

தேவார இசைமணி தாவடி ஆர். எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசைநிகழ்ச்சி இடம்பெற்றது. (இ-135)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

பகுதி - D

### கருத்தரங்குத் தொடர் - 2

### 1999 — 2000

இடம்: நூலக கேட்போர் கூடம்,
யாழ். பல்கலைக்கழகம்

காலம்: 08 – 07 – 1999 பிற்பகல் 2-30 மணி

தலைவர்: பேராசிரியர் க. சின்னத்தம்பி

பொருள்:

### "இந்திய தேர்தல் தொகுதிகளும் தேர்தல் முன்னோட்டமும்"

வழங்குபவர்:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

★ ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வே. ப. சிவநாதன்
செயலர், பகுதி – D

(சி/8099)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பழைய மாணவர் சங்கம்

சங்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அங்கத்தவர்களைச் சேர்க்கவும் பழைய மாணவர் சங்க அமைப்பாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர்களையும் பட்டங்கள் பெற்றோரையும் இச்சங்கத்தில் இணையுமாறு வேண்டிக் கொள்கின்றோம். விவரங்களுக்கு அமைப்புக்குழுவின் செயலாளர் கலாநிதி சி. சிறிசற்குணராசா, கணிதத்துறை, யாழ். பல்கலைக்கழகம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அங்குரார்ப்பணமும் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டமும் செப்ரெம்பர், 1999 இல் நடைபெறும். இதற்கான திகதி பின்னர் அறியத்தரப்படும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
அமைப்புக்குழுத் தலைவர்

(சி/8103)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 27 — 0ï — 1927

விண்ணில் 24 — 05 — 1999

திருமதி
### செபஸ்தியாம்பிள்ளை மேரி திரேசம்மா

நல்லதோர் அம்மாவாக நானிலத்தில் நமக்கு
நல்லம்மா என்று சொல்லி நாவால் புகழ் பரப்ப
வாழ்ந்திட்ட அன்னையே!
வாழ்க்கையில் எத்தனையோ இழப்புக்கள் இடர்கள்
சூழ்ந்திட்ட போதும் கலங்காது
இறையன்பில் என்றும் நிறைந்து ஊக்கமுடன்
எமையெல்லாம் வளர்த்திட்ட
எம் இனிய அம்மாவே!
வானுலக இன்பத்தில் தாங்கள்
வாழ்ந்திடவே வேண்டுகின்றோம்.


தங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சில்லாலை.
பண்டத்தரிப்பு.

(67071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 07 | 07 |
| 09 | 07 |
| 1962 | 1997 |

## அமரர் வெற்றிவேலு இரத்தினராசா
(வடக்கு - கிழக்கு மாகாணசபை பொறியியலாளர்)

கடமை உணர்வுடன் நீ கட்டிய கல்விக்கூடம்
சென்றாய்

கடமையை முடித்து வீதிக்கு வந்தவேளை
விதி செய்த சதியால் வீதியில் துடித்தாய்,
துடிக்க வைத்தாய் விண்ணுலகம் ஏகினாய்!
உன் பிரிவைத் தாங்காமல் கதறுகின்றோம்
இன்றும் நாம்

உன் இனிய முகத்தை நாம் இனி எப்போது
காண்போம்?

ஆண்டு இரண்டானதையா ஆறவில்லை எம் மனம்
ஆனாலும் கர்த்தரிடம் எம்மனதை ஒப்படைத்தோம்
மங்கா உன் நினைவுடன், நாமும் மரமாய்
வாழ்கின்றோம்.

குடும்பத்தினர்

திரு. க. வெற்றிவேலு
''இரத்தின வாசம்'',
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(சி/8090)

# YEAR END PARTY

3 ஆம் வருட 'A' பிரிவு கலை, முகாமைத்துவ வர்த்தகபீட மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

இடம்: STUDENT'S COMPLEX
காலம்: 10 – 07 – 1999 சனிக்கிழமை

3 ஆம் வருட A பிரிவு பிரதிநிதி

யாழ். பல்கலைக்கழகம்

(67228)

கரம்பொன்
## புனித செபஸ்தியார் ஆலய
# பெருவிழா

ஆயத்த வழிபாடுகள்:
08 – 07 – 99 வியாழன் மாலை 5.00 மணி
09 – 07 – 99 வெள்ளி மாலை 5.00 மணி
10 – 07 – 99 சனி மாலை 5.00 மணி

பெருவிழாத் திருப்பலி:
11–07–99 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி

(67226) – பங்குத்தந்தை

# இலங்கை மின்சார சபை
# யாழ். பிரதேசம்

மின்மார்க்கங்களில் இடையூறாகக் காணப்படும் மரங்கள், கிளைகள், ஓலைகள் போன்றவற்றை வெட்டி அகற்றுவதற்கான

# ஒப்பந்த வேலைகள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகள் செய்வதற்கு இவ்வேலைகளில் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சார சபை பிரதேச அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 536/1, இலக்கத்திலுள்ள பொது அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான நிபந்தனைகள், கட்டணங்கள் மற்றும் விவரங்களையும் இவ்வலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை''

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்

(சி/8076)

# மலசல கூடங்கள் அமைக்க உதவி

வலி. கிழக்கு, ஜூலை 7

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் வசதி குறைந்த குடும்பங்களுக்கு புதிய மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்க 'யுனிசெவ்' நிறுவனம் முன்வந்துள்ளது.

இப் பிரிவில் நாற்பது புதிய மலசல கூடங்கள் புதிதாகக் கட்டவென தலா 12 ஆயிரம் ரூபா வீதமும்—

ஐம்பது மலசல கூடங்களைப் புனரமைக்கவென தலா ஐயாயிரத்து 400 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதன் பொருட்டு இப்பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராம சேவையாளர்களுக்கு தகுதியான குடும்பங்களின் விவரப் பட்டியலைத்தருமாறு பிரதேச செயலர் பணித்துள்ளார். (உ-180)

# கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச்சங்கம் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி — யாழ். பல்கலைக்கழக வி. அணி எதிர் சென்றலைற்ஸ் வி.க அணி.

★ பிற்பகல் 5 மணி பற்றீஸியன் (கிறீன்ஸ்) வி.க அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி.க. அணி. (க)

# கட்டடம் திறப்பு

ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு. சிவபாலன் இந்தக் கட்டடத்தை திறந்து வைத்தார். (க)

உ
# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி ஜெசிந்தா

(07-07-99)

கலைவாணி வீதி கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் உதயமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வி **ஜெசிந்தா** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (07-07-99) தனது இல்லத்தில் அப்பா, அம்மா, சகோதரர்களுடன் கொண்டாடுகின்றார். ஜெசிந்தாவை அண்ணாமாரான பிரகாஸ் (கனடா). பிரதீபன், பிரதாஸ், பிரசாந், அப்பம்மா, அம்மம்மா, அப்பப்பா, பெரியம்மா, பெரியப்பா, சின்னன்ரி, சித்தப்பா (கனடா), றதிச்சித்தி சித்தப்பா (கனடா), செல்லன்ரி சித்தப்பா (கனடா), பெரியமாமா அத்தை (சுவிஸ்), சின்னமாமா சின்னத்தை (கனடா) மற்றும் உற்றார் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் காளியம்மன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

N. சோமசுந்தரம்
[அப்பா]

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.

[67221]


உ
கணபதி துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆனித் திங்கள் 25 ஆம் நாள் (99-07-09) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள கார்த்திகை நட்சத்திரம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

சுன்னாகம் ''தேவிவாசா''
தம்பையா – அன்னபூரணம்
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
திருவளர் செல்வன்
**விஜயராசா**
அவர்களுக்கும்



சுன்னாகம் 'இந்திரபிரதிஸ்ரம்
இராசரத்தினம்–இராசேஸ்வரி
தம்பதிகளின்
ஏக புதல்வி
திருவளர் செல்வி
**இராசசுலோசினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு உற்றார், உறவினர்களின் ஆசியுடன் தெல்லியூர் துர்க்காதேவி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், மணவிழாவில் தாங்களும் குடும்ப சகிதம் கலந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும் மணமகள் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்து மகிழ்வுறுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி இராசரத்தினம் (சுன்னாகம்)
திரு. இ. இராசரங்கன் (ஜேர்மனி)
திருமதி சி.ரோ.இராசரங்கன் (கொழும்பு)
திரு, இ. இராசலக்குமன் (கனடா)
திரு. இ. இராசராகுலன் (லண்டன்)
திரு, இ. இராசரஜீபன் (இந்தியா)

''இந்திரபிரதிஸ்ரம்'',
58, [illegible] வீதி,
சுன்னாகம்.
1999 – 07 - 07

(சி/8092)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறுபக்கம்

தென்னிலங்கையில் அரசாங்க வைத்தியர்கள் இப்போது நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கிறார்கள்! அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தனது பதினேழு நாள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டதன் பயன் இது.

நீண்ட காலத்துக்குச் சிகிச்சையின்றி நோயாளர்கள் அவதிப்படவும், உபாதையுறவும், மரணத்தை எதிர்நோக்கவும் வைத்து ''சரித்திரம்'' படைத்த வேலை நிறுத்தம் இது என்பது ஒரு பக்கம்.

இலங்கை அரசியலும் இனப் பிரச்சினைத் தீர்வும் காற்றலைகள் போன்று இரைந்து கரைந்துபோயுள்ளன என்பதை இந்த வேலை நிறுத்தம் எடுத்துக் காட்டுவது மறுபக்கம்.

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் நியமனத்தை மாகாணசபை கையாளக்கூடாது என்பதே வைத்திய அதிகாரிகளின் முக்கிய கோரிக்கையாக இருந்தது. இத்தனைக்கும் மாகாண சுகாதார சேவைக்கான பொறுப்பும் அதிகாரமும் அரசமைப்பு விதிகளின் பிரகாரம் மாகாண சபைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபை முறை எந்தளவுக்குப் பலவீனமானது என்பதே இங்கு நோக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும். மாகாண சபையும் அதன் அமைப்பு முறையும் தீர ஆராயப்படாமல், ஆலோசிக்கப்படாமல் அவசர அவசரமாகத் திணிக்கப்பட்ட ஒன்று என்பதனை இப்போது எல்லோரையும் புரிந்து கொள்ள வைத்திருக்கின்றன வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தமும் அவர்களின் பிரதான கோரிக்கையும்.

உறுதியான அத்திவாரம் இல்லாமல் ஆட்டங் கண்டுள்ள மாகாண சபை முறையின் மறு வடிவமே அரசாங்கம் தயாரித்துள்ள அதிகாரப் பரவல் தீர்வு யோசனை. மாகாண சபைகளின் அதிகாரங்கள் மிகவும் மெலிந்தவையும் குட்டையுமானவை. அரசின் உத்தேச பிராந்திய சபைத்திட்டம் — அதிகாரப் பரவல் திட்டம்— அவ்வாறில்லாமல் உறுதியான, அசைக்க முடியாத வலுவான, பலமான அதிகாரங்களைக் கொண்டு விளங்கும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது? அதற்கான உத்தரவாதம் என்ன?

அப்போதைய தமிழ்த் தலைமைகளில் பலவும் 'கவ்வைக்கும்' உதவாத மாகாண சபையை பெரும் வரப்பிரசாதம் என்று ஏற்றுக் கையேந்தி நின்றதை மறந்து விடுவதற்கில்லை. சும்மா இருப்பதை விட அரைப்பணத்துத் தாலி பரவாயில்லை என்ற போக்குடன், ஒன்றுமே இல்லாதிருப்பதைவிட ஏதோ ஒன்றைப் பெறுவது தான் விவேகம் என்று கதை அளந்து கையேந்திப் பெற்றதை மறைக்க முடியாது.

மூந்திய பாடத்தை, அனுபவத்தை மனதிற் கொண்டாவது இம்முறை விழிப்புடன் இருக்க வேண்டும். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்று தொடங்கிய கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக, சிங்களத் தலைமைகள் அரைகுறைகளைத் தமிழ்த் தலைவர்களின் தலைகளில் வைத்து அரைப்பதே தொடர் நாடகமாக அரங்கேறி வருகிறது.

பேசுவது ஒன்று, கேட்பது வேறொன்று, வாங்குவது இன்னொன்று என்ற கடந்த கால அரசியலை விட்டெறிந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு முன்னுரிமை கொடுத்து சேர வேண்டியதைக் கேட்டுப் பெறத் துணியவேண்டும். இன்றைய தலைவர்கள். இல்லையேல் அவர்கள் அரசியல் அரங்கிலிருந்து நீங்கிவிடுவதே மேல்!

# கல்விப் பகுதி புனரமைப்பு வேலைகள்; தடங்கல்கள் நீக்கப்பட வேண்டும்

## வடக்கு—கிழக்கு ஆளுநருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். கல்வித் திணைக்களத்தின் கீழ் நடைபெறும் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெறுவதற்கு இருக்கக் கூடிய தடங்கல்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனாவை கடிதம் ஒன்றின் மூலம் கோரியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கல்வித் திணைக்களத்தின் கீழ் கடந்த 1998 நவம்பர், டிசெம்பர் மாதங்களில் புனரமைக்கப்பட்ட கட்டடங்களுக்குரிய கொடுப்பனவுகள் இது வரை வழங்கப்படவில்லை. இதனால் ஒப்பந்தகாரர்கள் பல இன்னல்களுக்குள்ளாகி உள்ளனர்.

புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற வேண்டுமானால் சிவப்பு நாடா முறை முதலில் நீக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரத்தை வழங்குவது சிறப்பானது.

கல்விப்பணிப்பாளர்களுக்கு நிதி செலவிடுவதற்கு எந்த வித அதிகாரமும் வழங்கப்படவில்லை என்று அறிகின்றோம். எனவே இது தொடர்பாக கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்திலிருக்கும் கல்லூரிகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞான பாடங்களுக்குரிய செய்முறைப்பயிற்சி நடத்தப்படாமைக்குரிய காரணம் இவற்றுக்கு வேண்டிய இரசாயனப் பொருள்களும் ஆய்வுகூட உபகரணங்களும் இல்லாமையே என்று அறிகின்றோம்.

இதே வேளை சில பாடசாலைகளில் தளபாடங்கள் மேலதிகமாக இருப்பதுடன் சில பாடசாலைகளில் தளபாடங்கள் இல்லாமலிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே தளபாடம்குறைந்த பாடசாலைகளுக்கு தளபாடம் மேலதிகமாக உள்ள பாடசாலைகளிலிருந்து தளபாடங்களை பகிர்ந்துவழங்குமாறு கோருகின்றோம்.

திறம்பட நிர்வாகம்நடத்துவதற்கு பலதரப்பட்ட நிலைகளுக்கேற்ப அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

முக்கியமாக யாழ்ப்பாணத்தில் கல்வித்திணைக்கள இணைப்பதிகாரியாக கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு வேண்டிய அதிகாரங்களை வடக்கு—கிழக்கு மாகாணசபை வழங்க வேண்டும். அத்துடன் புனரமைப்பு வேலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதிகள் அந்த வருட முடிவுக்குள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [இ-5]

## சொற்பொழிவு

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் வரணி மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு சேவாச்சிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தாவினால் ''மனிதனின் உண்மை நிலை'' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். (இ – 30)

# வலி.மேற்கு பிரதேச அபிவிருத்திக்கு மேலதிகமாக ரூ.30லட்சம்ஒதுக்கீடு

## அடிக்கல் நடும் விழாவில் தலைவர் தகவல்

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஏற்கனவே கிடைத்த நிதிக்கு மேலதிகமாக 30 லட்சம் ரூபா இந்த ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வலிகாமம்மேற்கு பிரதேசசபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் கூறினார்.

வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலைய புதிய கட்டட அடிக்கல் நடும் விழா கடந்த 26 ஆம் திகதி பொ. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அடிக்கல் நடும் விழாவை பிரதம விருந்தினர் க. திரிலோகநாதன், சிறப்பு விருந்தினர் சங்கானை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ச. பரமேஸ்வரநாதன், வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் செ.நடராசா, தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ். ஞானேந்திரன், கிராம உத்தியோகத்தர்கள் வி. ரி. கதிர்காமநாதன், செல்விமா. தேவமனோகரி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

புதிய கட்டடம் அமையவுள்ள காணியை இராசநாயகம் – கருணா தம்பதியினர் அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு பேசுகையில் திரிலோகநாதன் மேலும் கூறியதாவது :—

### கலை, கலாசாரத்தில் முன்னிலை

மக்கள் கிராமங்களில் முன்னர் போல மீளக்குடியமரவில்லை என்று தெரிவித்து அரச அதிகாரிகள் அக்கிராமங்களைப் புறக்கணித்து அபிவிருத்திகளை மேற்கொள்ளாமல் இருப்பதை நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

இந்தக் கிராம மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு மிகவும் போற்றத்தக்கவை. இந்தக் கிராம மக்கள் கலையில், கலாசாரத்தில் சிறந்து விளங்கியதை எனது சிறு பராயத்தில் இருந்தே நான் அறிவேன். வலிகாமம் மேற்கு பிரதேசத்திலேயே இந்தக் கிராமம் முன்மாதிரியான கிராமம் ஆகும்.

இந்தக் கிராம மக்களின் கல்வி வளர்ச்சிக்கு காந்திஜி சனசமூக நிலையம் ஆற்றிய சேவைகள் மேன்மேலும் தொடர்வதற்கு இன்று அடிக்கல் நட்டு வைக்கப்பட்ட புதிய கட்டடம் துணை புரியும்.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு மேலதிகமாக ஒதுக்கி உள்ள 30 லட்சம் ரூபாவில் 4 லட்சம் ரூபாவை சிவன் கோயில் வீதியை திருத்தியமைப்பதற்கு ஒதுக்கியுள்ளேன். இப்பகுதியின் அபிவிருத்திக்கு இயன்றவரை நான் பாடுபடுவேன்.

இன்று அடிக்கல் நட்டு வைக்கப்பட்ட காந்திஜி சனசமூக நிலையக் கட்டடத்துக்கு 3 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வலிகாமம் மேற்கு பிரதேசத்திலேயே நவீன வசதிகள் கொண்ட நூல் நிலையமாக இந்த நூல் நிலையம் அமையும். இதற்கு இந்தக் கிராம மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. க. தணிகாசலம்பிள்ளை கூறிபதாவது:-

### மாற்றங்களுக்கு ஏற்ப மாற வேண்டும்

சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய எமது கிராமம் நவீன உலகத்தின் மாற்றங்களுக்கு ஏற்றவாறும் மாறிக் கொள்ள வேண்டும் எமது முன்னோர் இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றில் எவ்வளவு வல்லவர்களாக இருந்தார்களோ அதேபோல நாளைய எமது சமுதாயமும் நவீன உலகத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப மாறிக் கொள்ளக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு இந்த நூல் நிலையம் துணைபுரிய வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்தும் எமது ஊர்மக்கள் இந்தநூல் நிலையத்தை நவீன வசதிகள் கொண்ட நூல் நிலையமாக அமைப்பதற்கு தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

அரசின் உதவியை மட்டும் நம்பியிருக்கக் கூடாது — என்றார்.

இந்த விழாவில் சங்கானை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு ச. பரமேஸ்வரநாதன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள்.

(இ-175)

## நாளை

ஆனி 24

வியாழக்கிழமை

திதி: தசமி

முன் இரவு: 8.41 வரை

நட்சத்திரம்: அச்சுவினி

காலை 6.13 வரை.

பரணி பின்னிரவு

4.40 வரை

சுபநேரம்: 7.28— 8.58

ராகுகாலம்: 1.28 — 2.58

(பகலுக்கும் [illegible]

பழைய நேரப்படி)

## உதயவாக்கு

'வலிமை' என்பது ஒருவருக்கு தன்னால் மட்டும் அமைய வேண்டும் அல்லாமல் பிறரின் தூண்டுதலா [illegible] யாலும் அமைவது இல்லை

-அரையனார்.

## கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இணுவில் மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சரஸ்வதி மலை அரங்கில் அதிபர் துரை. எங்கரசு தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா, வலிகாமம் கல்வி வலய பாட அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கல்லூரியின் முன்னாள் அதிபர் மு. திருஞானசம்பந்தபிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## பால்மா விநியோகம்

கொழும்புத்துறை, ஜூலை 7

தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் ஆகியவற்றில் இன்று புதன் காலை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் இலவசமாக மாணவர்களுக்கு போஷாக்கு பால்மா வகைகள் வழங்கப்படும்.

இந்த நிகழ்வுக்கு சேவாச்சிரமத்தின்செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா தலைமை வகிப்பார்.

(இ-30)

## மலசலகூடவசதி குறைவு

திருநெல்வேலி, ஜூலை 7

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மல சல கூடவசதிகள் பற்றாக் குறையாக இருந்து வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1996 ஆம் ஆண்டில் 25 ஆசிரிய மாணவர்கள் மட்டும் கற்ற இந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தற்போது 326 ஆசிரிய மாணவர்கள் கற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த அதிகரிப்புக்கேற்ற விதத்தில் இங்கு மல சல கூட வசதிகள் இல்லாதிருப்பதாக ஆசிரிய மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-135)

## நூல் நிலையம்

கொக்குவில் ஜூலை 7

கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையத்தில் நல்லூர் பிரதேச சபையின் கிளை நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

(இ-69)

## கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அலுவலர்களும் இணைந்து கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐம்பது முதியோர்களுக்கு போஷாக்கு கல்வி கருத்தரங்கை நடத்தவுள்ளனர்,

(இ-117)

## தேடுதல்

வலி. வடக்கு ஜூலை 7

குப்பிளான், மயிலங்காடு பகுதியில் கடந்த ஞாயிறன்று பாதுகாப்பு படையினர் சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது இளைஞர்களது அடையாள அட்டைகள் சோதனையிடப்பட்டு அவர்கள் விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (இ-133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு கொழும்புக்கு மேலதிக பொலீஸார்!

கொழும்பு, ஜூலை 7

கறுப்பு ஜூலை தினங்களில் புலிகள் கொழும்பில் தாக்குதல் மேற்கொள்ளத்திட்டமிடுவதாகக் கிடைத்த தகவல்களையடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்புக்காக வெளி இடங்களிலிருந்து 300 பொலீஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ் தரிப்பிடமும் தனியார் பஸ் தரிப்பிடமும், புறக்கோட்டை அரச மரத்தடிப் பகுதியும் இராணுவத்தினரின் உதவியுடன் நேற்று முன்தினம் பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது

சந்தேகத்தின் பேரில் 16 பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இரவு 7 மணியிலிருந்து 11 மணி வரை இத்தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நகர் வீதித்தடைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் அமைந்துள்ள லொஜ் மற்றும் வீடுகளும் சோதனைக்குள்ளாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-8]

## மெய்வல்லுநர் போட்டி

தொல்புரம் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில்நடைபெறும்.

## தமிழ்த் தினவிழா

நாவற்குழி மகாவித்தியாலய தமிழ்த்தின விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் பி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக வித்துவான் க. சொக்கலிங்கமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. ஆர். டேவிட்டும் கலந்து கொள்வர். (உ-102)

## மோசமான நிலையில் முனீஸ்வரன் வீதி

அரியாலை, ஜூலை 7

யாழ். பஸ் நிலையப்பகுதியில் இருந்து ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகிலே செல்லும் முனீஸ்வரன் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி கடந்த பல வருடங்களாக தார் ஊற்றிச் செப்பனிடாததால் மிகவும் மோசமானநிலையில் இருந்து வருகின்றது.

மக்கள் இவ்வீதியால் அதிகளவு போக்குவரத்து செய்வதால் வாகனங்கள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (இ -17)

## விதை நெல்லை வழங்க சம்மேளனம் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜூலை 7

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் கால போக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளில் பலர் விதை நெல் இல்லாது சிரமப்படுகின்றனர். இவர்களுக்கு மானிய அடிப்படையில் விதை நெல்லை தென் இலங்கையில் இருந்து எடுத்து வந்து வழங்குவதற்கு ஆவன செய்யப்படவேண்டும்.

இவ்வாறு திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் சி.பொ.மா. . முதலியாரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் கடந்த ஆண்டில் வரட்சியினாலும் பின்னர் பெய்த அடைமழை, வெள்ளத்தினாலும் இப் பிரதேசத்திலுள்ள நெற்காணிகளில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை பெருமளவு அழிந்து விட்டது.

இந்த நிலையில் விதைநெல் இல்லாது இப் பகுதியிலுள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இவர்களுக்கு தென் இலங்கையிலிருந்து நல்லதரமுள்ள விதை நெல் ரகங்களைக் கொள்வனவு செய்து மானிய அடிப்படையில் வழங்குமாறு வேண்டுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் ஆகியோருக்கும் இந்த மகஜரின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-135)

## மட்டுவிலில் நூற்றாண்டு விழா

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவர் பிறந்த இடமான மட்டுவிலில் அவரது நூற்றாண்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி அவரது ஞாபகார்த்த மணி மண்டபம் அமைந்துள்ள இடம் சிரமதானம் மூலம் பொது மக்களால் கடந்த வாரம் துப்புரவு செய்யப்பட்டது.

இதே வேளை நூற்றாண்டு விழாவையொட்டி மட்டுவில் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, கவிதைப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

இந்தப் போட்டிகள் மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்டன. [இ-31-117]

# போசாக்குத் தேவையைப் பெற உகந்த கால்நடை வளர்ப்பு

## மிக அவசியம் என்கிறார் அதிகாரி

வலி. தெற்கு, ஜூலை 6

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர்பிரிவில் தற்போது வாழும் மக்களின் போஷாக்குணவுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவில் கால்நடைகள் வளர்க்கப்படவில்லைஇப்பகுதியில்உள்ள 30 கிராமசேவையாளர் பிரிவுகளில் வாழும் 34 ஆயிரம் மக்களின்தேவையைபூர்த்திசெய்யக்கூடியதாக விவசாயத்திலும் கால்நடைவளர்ப்பிலும் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கான கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பண கூட்டத்தில் உரை நிகழ்த்திய உடுவில் பிரதேச பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் த. தேவராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் சி. குமாரவேல்தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் த. தேவராஜன் தனது உரையில் மேலும் கூறியதாவது: —

மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 74 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 34 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர்.

இடப் பெயர்வுக்கு பின்னர் கால்நடை, விவசாயம் ஆகியவற்றை புனரமைப்பு செய்ய வேண்டி இருந்தது.

விவசாயத்துக்கு தேவையான உபகரணங்கள், வெங்காயம் போன்ற விதை பொருள்கள் அவற்றுக்குத் தேவையான உள்ளீடுகள், மண்ணெண்ணெய் மற்றும் கோழிகள், ஆடுகள், மாடுகள் போன்ற பலவற்றை மக்களுக்கு இலவசமாக வழங்கி கால் நடையையும் விவசாயத்தையும் பெருக்கிக் கொள்ள உதவி புரிந்தோம்.

இன்று இப்பிரிவில் சுமார் 25 ஆயிரம் கோழிகள் உள்ளன. 4,000 மாடுகள் உள்ளன 4,000 ஆடுகள் உள்ளன இருப்பினும் இத்தொகை இங்குள்ள மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை.

வலிகாமம் தெற்கு மக்கள் இதுவரை வலி — வடக்கு கால்நடை வளர்ப்போர் சங்கத்துடன் இணைந்தே செயற்பட்டு வந்துள்ளனர். சுகாதாரதேவைகளுக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் பிரிவையே பயன்படுத்த வேண்டி உள்ளது.

சுகாதார வைத்தியர் பிரிவும், கால்நடை வளர்ப்போர் பிரிவும் எமக்கு தனியாகத் தேவை என பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

இன்று கால்நடை வளர்ப்போர் சங்கத்தை அமைக்க முடிந்தது. அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிடம் நிதி உதவிகளை இச்சங்கத்தினூடாகப் பெற்று பல பயன்களை அடையலாம்.

விவசாயத்திலும், மிருக வளர்ப்பிலும் கூடிய கவனம் செலுத்தித் திட்டமிட்டு பல அபிவிருத்தி பணிகளை செயற்படுத்தினால் இப்பிரதேச மக்களின் உணவுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும் — இப்படிக்கூறினார்.

சுன்னாகம் கால்நடை வைத்தியர் எஸ்.மகாதேவன், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன், பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கணேஸ் ஆகியோரும் அங்கு உரை நிகழ்த்தினர்.

கால்நடை வளர்ப்போர் சங்கத்துக்கான [illegible] தெரிவு இடம்பெற்றது. (இ - 152)

# எட்டு வயதுச் சிறுவன் மர்மமான முறையில் மரணம்

## கோப்பாயில் சம்பவம்

வலி. கிழக்கு, ஜூலை 7

எட்டு வயதுச் சிறுவன் ஒருவர் வீட்டு வளையில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் கோப்பாயில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த சின்னப்பு முரளீதரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

கோப்பாய் மத்தி ஆசாரிலேனில் உள்ள இவரது வீட்டில் ஞாயிறு பகல் இச்சம்பவம் இடம் பெற்றது.

தகப்பனை சிறுவயதில் இழந்த இந்தச் சிறுவனுக்கு மூன்று சகோதரர்கள் உண்டு என்று கூறப்படுகின்றது.

சம்பவ தினம் வீட்டில் இருந்தோர் கூலி வேலைக்குச் சென்றனர் எனவும் இவருடன் கூட இருந்த இவரது சகோதரன் இவரைத் தனியாக விட்டுவிட்டுக் கடைக்குச் சென்று திரும்பி வந்த போது வீட்டின் வளையில் இவர் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு அயலவர்களை உதவிக்கு அழைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கோப்பாய் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுவனின் சடலம் மரண விசாரணைக்காக யாழ். மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. [இ-180]

## வாசகர் திருமுகம்

## நியாயமான கட்டணம் அறவிடச் சங்கம் அமைக்குக

யாழ். குடாநாட்டில் இன்று மிகவும் பிரபல்யமாகி வரும் தொலைத் தொடர்பு சேவை மக்களுக்கு அளப்பரிய தொண்டாற்றி வருகிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எங்கு பார்த்தாலும் 'கொமினிகேசன்' தொலைபேசி நிலையத் திறப்பு விழாக்கள் என்ற பரபரப்பான விளம்பரங்கள். இவற்றுள் எத்தனை நிலையங்கள் மக்களுக்கு இதய சுத்தியுடன், கண்ணியமான, நேர்மையான சேவைகளை வழங்குகின்றன என்று பலர் அங்கலாய்க்கத் தொடங்கியுள்ளார்கள்.

ஒரு ''கொமினிகேசனில்'' நிமிடம் ஒன்றுக்கு 8 ரூபா என்றால், மற்றொரு இடத்தில் 7 ரூபா என்றும் வேறொரு இடத்தில் 6 ரூபா என்றும் வித்தியாசமான, மாறுபட்ட முறைகளில் பணம் வசூலிக்கப்படுகிறது.

வேறுபடும் கட்டணங்கள் விடயமாக 18-06-99 'உதயன்' நாள் இதழில் பிரசுரமான செய்தி கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அண்மையில் ஜூன் முதலாம் திகதியிலிருந்து ரெலிகொம் நிறுவனத்தினரால் அறிவிக்கப்பட்ட தொலைபேசிக்கட்டண உயர்வுகளின்படி நிமிடம் ஒன்றுக்கு வரிகள் தவிர 5 ரூபா 40 சதமும், பொ. சே. வரி மற்றும் தே. பா. வரி என்பவற்றுடன் மொத்தமாக ஆகக்குறைந்த கட்டணம் 8 ரூபா வரை கணக்கிடப்பட்டுள்ளது. இருந்தும், இடத்துக்கு இடம் பல்வேறு வசதிகளுக்கேற்ப, சற்று அதிகமான கட்டணம் அறவிடப்படுவது தவிர்க்கமுடியாத விடயம்.

நேரம் காட்டிகளில் மோசடிகள் செய்து குறுக்கு வழிகளில் மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிப்பவர்களைப் பற்றி பொது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பெருந்தொகைபான பணத்தை முதலீடு செய்து 'கொமினிகேசன்' நடத்துபவர்களிடம் போட்டி, பூசல், பொறாமைகள் ஏற்பட வழிவிடாது எல்லோரும் ஒற்றுமையாக ஒரு சங்கம் அமைத்து எல்லோராலும்ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரேசீரான, நியாயமான கட்டணத்தை அறவிட்டால், மக்களின் பல சந்தேகங்கள் தீரும். சேவை மனப்பான்மையும் அதிகரிக்கும்.

எஸ். ஆர். சுப்பிரமணியம்

கொழும்புத்துறை.

## முழுதாகத் திருத்துவது எப்போது?

எங்கள் ஊரில் 750ஆம் இலக்கப் பிரதான வீதியையும் 751 ஆம் இலக்கப் பிரதான வீதியையும் இணைக்கும் பிரதான குறுக்குப்பாதையாக விளங்குவது பாடசாலைவீதி எனப்படும் ''வெள்ளை றோட்'' ஆகும் இந்தப் பாதை சென்றவருடம் ஒரு குறிப்பிட்டதூரம் செப்பனிடப்பட்டது. ஆனால் மிகுதிப்பாதை செப்பனிடப்படவில்லை. செப்பனிடப்படாத பகுதி குண்டுங் குழியுமாக போக்குவரத்துசெய்வோரை பெருங்கஷ்டத்திற்கு ஆளாக்குகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவித்தும் பலன் இல்லை. இவ்வீதியாலேயே இமையாணன் அ. த. க. வித்தியாலய மாணவர்கள், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி மாணவர்கள், உடுப்பிட்டி மகளிர்கல்லூரி மாணவிகள், ஆசிரியர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் என்று பெரும்எண்ணிக்கையானோர் செல்வது வழமை. ஆனால் அவர்கள்படும் கஷ்டம் குறைந்ததல்ல. சிலர் போக்குவரத்தின் போது இவ் வீதியால் சைக்கிளை உருட்டிக்கொண்டு போவதும் உண்டு. இப்பாடசாலை வீதி எப்போது முழுதாகத் திருத்தப்படும்? சம்பந்தப்பட்ட துறையினர் ஆவனசெய்வார்களா?

கோ. கிருஷாந்தன்,

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜூலை 7

வடபிராந்திய இந்துப் பேரவை யாழ். பிரிவின் விசேட சர்வசமய கலந்துரையாடலும் ''அருள்நெறி'' சஞ்சிகை ஆவணி வெளியீட்டு நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் பணிமனையில் தலைவர் சங்கீத பூஷணம் ப. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும். (உ-30)

## முதலாமிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அகில இலங்கை ரீதியில் கொழும்பில் நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவன் ரி. பிரகாஷ் கட்டுரைப் போட்டியின் 4 ஆம் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (உ-3)

## நுவரெலியாவில்

# இந்து மதகுருவுக்கு கடும் இம்சை; விசாரணை நடத்த வேண்டுகோள்!

### ஜனாதிபதியிடம் இந்துமாமன்றம் கோரிக்கை

கொழும்பு ஜூலை 7

''நுவரெலியா பொலீஸ் நிலைய கிளர்ச்சித் தடுப்புப் பிரிவால் கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட இந்து மத குரு ஒருவர் மேற்படி கிளர்ச்சித் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியால் இம்சைப்படுத்தப்பட்டது குறித்து உடனடி விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு உத்தரவிட வேண்டும்.''

— அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவிடம் இவ்வாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக இந்து மாமன்றம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சுப்பிரமணியஐயர் கேதீஸ்வரக் குருக்கள் (வயது 32) கடந்த ஒக்ஸ்ட் 11 ஆம் திகதி நுவரெலியா பொலீஸ் நிலைய கிளர்ச்சித் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொன்சேகா என்பவரால் கொட்டகலையில் வைத்து கைது செய்யப்பட்டார். நுவரெலியா பொலீஸ் நிலயைத்தில் ஏழரைமாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். தற்போது அவர் களுத்துறை சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரைக் கைது செய்ததற்கான காரணம் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பொலீஸ் அதிகாரி பொன்சேகாவால் அவரது பூணூல் வெட்டி அகற்றப்பட்டது. அத்துடன் அவர் அந்த அதிகாரியால் மீன் சாப்பிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

ஓர் இந்துக் குருவின் பூணூலை வெட்டி அகற்றியது பாரதூரமான செயல். இது இந்துக்களின் உணர்வலைகளை இம்சைப்படுத்துவதுடன் முழு இந்து சமுதாயத்தையும் அவமானப்படுத்துவதாகவும் உள்ளது. இந்த நாட்டில் பின்பற்றப்படும் சகல மதங்களுக்கும் பாதுகாப்பும் மதிப்பும் அளிக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுத்த தங்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பில் இந்து குரு ஒருவரை அசைவ உணவு உண்ணும்படி செய்த பாதுகாப்பு உத்தியோகத்தரின் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரச பாதுகாப்பில் இந்துக் குரு ஒருவர் இவ்வாறு தாக்கப்பட்டது இது முதற் தடவையல்ல என்பதையும் சுட்டிக் காட்டுகின்றோம்,

இது தொடர்பாக உடனடி விசாரணை நடத்தப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிடுமாறு கோருகின்றோம் — இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவையொட்டிய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4.00 மணி — பமிலியன்ஸ் வி. க. அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. அணி.

★ பிற்பகல் 5.00 மணி — கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வி. க. அணி எதிர் யாழ். பல்கலைக்கழக வி. க. அணி.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவையொட்டி பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வந்த — விலல் முறையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

இந்த ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4.00 மணி — யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி வி. க. அணி எதிர் பாரதி வி. க. அணி.

★ பிற்பகல் 5,15 மணி — அரியாலை ஐக்கிய வி. க. அணி எதிர் சென். அன்ரனிஸ் வி. க, அணி. (உ-3-க)

## 5 மாத காலத்தில்

# 67 ஆயிரம் போத்தல் கள் நிலத்தில் ஊற்றப்பட்டது

தென்மராட்சி, ஜூலை 7

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் தவறணைகளில் கடந்த ஜனவரி தொடக்கம் மே வரையிலான காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட கள்ளில் 67 ஆயிரத்து 457 போத்தல் கள் நிலத்தில் ஊற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த காலப் பகுதியில் அங்கத்தவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கள்ளில் விற்பனவு செய்யப்பட்ட கள் திக்கம் வடிசாலைக்கு அனுப்பப்பட்ட கள் ஆகியவற்றைவிடக் மேலதிகமாகவுள்ள கள்ளே நிலத்தில் ஊற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

திக்கம் வடிசாலைக்கு வாரம் 12 ஆயிரம் போத்தல் கள் மதுசாரத் தயாரிப்புக்கு அனுப்பப்படுவதாகவும் தற்போது கைதடி வடிசாலைக்குத் தினமும் கள் அனுப்பப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிகமாகவுள்ள கள்ளில் இருந்து சங்கத்தினால் செறிவு குறைந்த மதுசாரம் (லோவைன்) தயாரிக்கப்பட்டு கைதடி வடிசாலைக்கு வழங்கப்படுகிறது. [இ-117)

# 3,70,000 வி. அடையாள அட்டைகள் குடாநாட்டில் இதுவரை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவினால் கடந்த மே மாதம் வரை 3 லட்சத்து 70 ஆயிரம் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தொலைந்துபோன அடையாள அட்டைகளுக்குப் பதிலாக 915 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது தொலைந்து போன விசேட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகள் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள போதிலும் சேதமடைந்த அடையாள அட்டைகளுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு புதிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சேதமடைந்தவற்றுக்கு பதிலாக புதிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பத்துடன் சேதமடைந்த அட்டைகளும்சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

# எச்சரிக்கை செய்யப்பட்டு 3 இளைஞரும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்துக்கு அண்மையில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாகக் கூறப்படும் மூன்று இளைஞர்களையும் யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் கடுமையாக எச்சரித்து வீடு செல்ல அனுமதித்தார்.

கடந்த 27 ஆம் திகதி குறிப்பிட்ட இடத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாக பா. விஷ்ணுகாந்தன், கு. கௌரிதரன், பூ. செல்வகிருஷ்ணன் ஆகியோர் யாழ். பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

ஏற்கனவே யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இவர்கள் நேற்று நீதிமன்றத்தில் தமது வழக்குத் தவணைக்கு சமுகமளித்தனர்.

அப்பொழுதே இவர்கள் எச்சரிக்கப்பட்டு வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

# காங்கேசனில் உள்ள இளைஞரை நீதிமன்றில் ஆஜராக்க பணிப்பு

நெல்லியடி ஜூலை 7

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் — வல்வெட்டித்துறை வேவில் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி கிருஷ்ணகுமார் (வயது 28) என்னும் இளைஞரை அடுத்த மாதம் 11 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜராக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா, வல்வெட்டித்துறைப் பொலீஸாரை பணித்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரத்தினகோபால் பிரதீபன் என்பவரைப் பொல்லால் அடித்துக் காயப்படுத்தியது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் எடுக்கப்பட்ட சமயமே நீதிவான் மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கு அருகில் கடந்த மாதம் பொலீஸ்காரர் ஒருவர் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரஸ்தாபநபர் படையினரால் கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (உ-3-109)

## சமய சந்நிதிகளில்

நாவற்குழி, ஜூலை 7

கைதடி மேற்கு இடிங்கித் தோட்ட கந்தசாமி கோயிலில் இலட்சார்ச்சனை நாளை வியாழக்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து 14 ஆம் திகதி சஙகாபிசேகமும் 15 ஆம் திகதி திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளது. (உ-102)

★ ★ ★

அல்வாய் மாலை சந்தை பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (உ-109)

★ ★ ★

அல்லைப்பிட்டி உத்தரிய மாதா ஆலயத்தின் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அதனைத் தொடர்ந்து திருவிழா ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு அல்லைப்பிட்டி திருச்சபையைச் சேர்ந்த சிறுவர்களுக்கு உறுதிப்படுத்தல் திருச்சடங்கு நிறைவேற்றப்படும். மறுநாள் காலை 7.30 மணிக்கு திருவிழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (உ-3)


## தீஸ் எலெக்ரோனிக்ஸ்

616, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

எமது ஸ்தாபனம் இடம் மாற்றம் செய்யப்படவுள்ளதால் எம்மிடம் கையளித்த ஒலிப்பதிவு நாடாக்கள் மற்றும் பழுதுபார்க்க ஒப்படைத்த மின் உபகரணங்களை 10-07-99க்கு முன்னர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

(67249)



உ

அல்வாய் மாலை சந்தை

## ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய பிரம்மாதி வருட மஹோற்சவம்

கொடியேற்றம்:- 08-07-1999
வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு

தேர்த்திருவிழா:- 16-07-1999
வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு

தீர்த்தத் திருவிழா:- 17-07-1999
சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு

உற்சவங்கள் காலையில் 8.00 மணிக்கும் மாலையில் 4.00 மணிக்கும் ஆரம்பமாகும்.

குறிப்பு:- தினமும் மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை சமய சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெறும்.

சி/8106) பரிபாலன சபை



## கண்ணீர் அஞ்சலி

நெல்லியடி திருமகள் ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும் நெல்லியடி வாணிபர் கழக முன்னாள் உப தலைவருமாகிய

## இ. இராஜதுரை

அவர்கள் சனிக்கிழமை கொழும்பில் காலமாகி இன்று புதன்கிழமை இறுதிக்கிரியை ள் நடைபெறும் இவ்வேளையில் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். அவர் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவருடன் நாமும் எமது துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

— நெல்லியடி வாணிபர் கழகம்

கரவெட்டி. (சி/8107)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கசிப்பு விற்ற ஐவருக்கு நீதிமன்று தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 7
கசிப்பு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில்பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட 5 பேர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சி. ஜோன்பிள்ளை (கோப்பாய்), நா. நடராசா (நல்லூர்), த. சந்திராதேவி (கோப்பாய்), நா. தர்மலிங்கம் (நல்லூர்), ஆ. யோசெப் சேவியர் (கச்சேரி ஒழுங்கை) ஆகியோரே கசிப்பு விற்பனை செய்யும் போது கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்தஐவரையும்எச்சரிக்கை செய்த யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் குறிக்கப்பட்ட தொகை தண்டப்பணத்தை இவர்களிடமிருந்து அறவிடுமாறு உத்தரவிட்டார். (உ-5)

# சட்டவிரோதமாக மாடு வெட்டினராம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
அனுமதியின்றிசட்ட விரோதமாக மாடு வெட்டினர் என்று கூறப்படும் மூவர்யாழ். பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்,

கொழும்புத்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த க. உதயகுமார், சி. தங்கராசா, கு. இராமசாமி ஆகியோரே மேற்படி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

தலா 200 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு இவர்களுக்கு நீதிவான் உத்தர விட்டு அவர்களை விடுவித்தார். (இ-5)

# பாக். சிப்பாய் கைது!

புதுடில்லி, ஜூலை 7
காஷ்மீரில் பாகிஸ்தான் இராணுவ வீரர் ஒருவரை இந்திய இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

பாட்லிக் பகுதியில் நேற்று இடம்பெற்ற கடும் மோதலையடுத்து நாயக் இனியாக் அலி என்ற இந்த பாகிஸ்தான் இராணுவ வீரர் கைது செய்யப்பட்டார்.

இந்தியத் துருப்பினரால் கைது செய்யப்பட்ட முதலாவது பாகிஸ்தான் இராணுவ வீரர் இவர் ஆவார்.

தம்மால் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் இராணுவ வீரரை ஜெனீவா உடன்படிக்கைகளின்படி ஒரு போர்க்கைதியாகவே தாங்கள் கருதப் போவதாக இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-9)

## வாகனத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதில் வந்த நால்வரையும் கடுமையாகத் தாக்கிய பின், வாகனத்துக்குத் தீயிட்டுக் கொளுத்தி, எரியும் வாகனத்துக்குள் அந்த நால்வரையும் தூக்கிப் போட்டதாகக் கூறப்படுகின்றது.

பின்னால் 'டபிள் கப்'வாகனம் ஒன்றில் வந்தோர் இதனைக் கண்டு தமது டபிள் கப் வாகனத்தை விட்டு இறங்கி, காட்டுக்குள் ஓடித் தப்பினர் என்றும் —

அவர்களின் வாகனமும் பின்னர் தீயிடப்பட்டதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அந்தக்குழு அந்தப் பகுதியில் அமைந்திருந்த தேநீர்கடை ஒன்றைத் தாக்கி தீயிட்டதாகவும் தெரிகின்றது.

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் தேசிய அமைப்பாளர் இரா. துரைரத்தினம் இந்தச் சம்பவம் குறித்துத் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளதுடன் விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஆனால்—

இந்தச் சம்பவம் நடந்த இடத்துக்குச் சமீபமாக இராணுவ முகாம் ஒன்று அமைந்துள்ளது என்றும்—

அந்த பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பதில்லை என்றும்—

சுயாதின செய்தி வட்டாரங்களை மேற்கோள்காட்டி அம்பாறைத் தகவல்கள் தெரிவித்தன. (உ-14-3-21)

## வன்னிக்கான...

[முதலாம் பக்கத் தொடர்]

யல்துறை செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

பாதை திறப்புத் தொடர்பாக புலிகள் விடுத்துள்ள இந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளினால் தொடர்ச்சியான இடம்பெயர்வும், சாவும், அழிவும் என மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்படும் பாதை நீண்டகாலமாக மூடப்பட்டுள்ளது. அந்தப் பொருள்களைஎடுத்து வரும் வாகன அணியும் நிறுத்தப்பட்டுள்ளது.

பெரும் அவல நிலையில் உள்ள மக்கள் இதனால் பெரும் உணவு நெருக்கடியையும் சந்தித்துநிற்கின்றார்கள்.

இதன் காரணமாக ஒரு பாதையைத் திறப்பதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது விடயமாக எமது பிரதிநிதிகளுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் கலந்துரையாடினர்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுவருவதற்கான பாதை ஒன்றைத் திறக்க இணக்கம்காணப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணம்—கண்டி வீதியில் ஏ 9 பாதையைத் திறக்க எமது இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளோம்.

அது தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாகவும் அதற்கான உறுதிப்பாடுகள் சம்பந்தமாகவும் ஸ்ரீலங்கா படைத்தரப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவாக ஏற்பாடு செய்வதாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு எமக்கு உறுதி அளித்துள்ளது.

—இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

## தந்திரிமலையில்...

[முதலாம் பக்கத் தொடர்]

பின்னர் பயணிகள் பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டு, பஸ் தீக்கிரையாக்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பெண் பயணிகள் மூவர் காயமடைந்தனர் என்றும் —

இரு பயணிகள் தொடர்பாகத் தகவல் இல்லை என்றும்—

மேலும் கூறப்பட்டது. (உ-3-21)

## வேலணையில்...

[முதலாம் பக்கத் தொடர்]

என்பது தெரிந்ததே.

இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் வேலணையில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் இன்று விஸ்தரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3-167)

# வன்னியில் விடாது ஷெல் தாக்குதல்கள்

வவுனியா ஜூலை 7
இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவை அண்டிய பகுதிகளை நோக்கி நேற்று முன்தினமிரவு 9. 30 மணி முதல் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகள் கூட அதிர்ந்தன. மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

இதேவேளை —

நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் ஒரு மணி நேரமும் நேற்றுக்காலை 9 மணியளவிலும் மண்டைதீவு, கச்சாய் ஆகிய பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பூநகரிப்பகுதியில் வீழ்ந்து வெடித்ததாகவும் —

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை என்றும் —

'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. (உ-6)

# நாடளாவிய ரீதியில் சிறுவர்களுக்கு சித்திர, கட்டுரைப் போட்டிகள்

வலிகாமம்தெற்கு, ஜூலை 7
பாடசாலை மாணவர் மத்தியில் சிறுவர் உரிமைகள் பற்றிய முழுமையான அறிவை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடனும், சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடும் முகமாகவும், மனித உரிமைகளுக்கும், அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கத்தின் சிறுவர் பிரிவு நாடளாவிய ரீதியில் கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இது சம்பந்தமாக கொழும்புப் பொது நூலகத்தில் செப்ரெம்பர் 29 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் முதலாம் திகதி வரை கண்காட்சியொன்றினை நடத்தவும் சங்கம் முடிவு செய்துள்ளதாக அதன் அலுவலக அத்தியட்சகர் கல்யானந்த திராணகம தெரிவித்துள்ளார்.

சித்திரப் போட்டியிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் இருநூறு சிறந்த சித்திரங்கள் மேற்படி கண்காட்சியில் பார்வைக்கென வைக்கப்படும்.

பாடசாலை மாணவர்களிடையே கனிஷ்ட பிரிவு (12 — 15 வயது), சிரேஷ்ட பிரிவு (16 — 18 வயது) என இரு பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

முதலாம் பரிசாக நாலாயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக இரண்டாயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் ஒவ்வொரு வகையிலும் 500 ரூபா பெறுமதியுடைய ஐந்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்பவர்களுடைய விண்ணப்பங்களை ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-132)

# 45 பட்டதாரிகளுக்கு திட்டமிடல் பயிற்சி

வடக்கு—கிழக்குமாகாணத்தில் இருந்து அபிவிருத்தி அலுவலர்களாகத்தெரிவு செய்யப்பட்ட—பயிற்றப்பட்ட 45பட்டதாரிகளுக்கு—அபிவிருத்தித் திட்டமிடல் தொடர்பான விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிகளை கொழும்பில் வைத்து வழங்குவதற்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு—கிழக்குமாகாணத்தில் ஒரு மாதப் பயிற்சியை முடித்துக் கொண்ட பட்டதாரிப் பயிலுநர்கள் தற்போது உள்ளூராட்சித் திணைக்களங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கே தற்போது கொழும்பில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான பயிற்சிகளை வழங்க மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுமுடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (உ-185-6)

# பாடசாலை கட்டட வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளில் வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வுகூடம் ஆகியவை அமைக்கவும் இரு பாடசாலைகளில் கட்டட திருத்த வேலைகளை மேற்கொள்ளவும் வலயக்கல்வி அலுவலகத்துக்கு தற்காலிக கொட்டில்கள் அமைக்கவும் வடக்கு கிழக்கு கல்வி அமைச்சு நிதி வழங்கியுள்ளது.

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் புதிய வகுப்பறைத் தொகுதிகளும்—

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடம் புதிதாக நிர்மாணிக்கவும்—

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகியபாடசாலைகளின் வகுப்பறைகள் திருத்துவதற்கும்—

கல்வி வலய அலுவலகத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கவும்—

நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வெலிஓயா...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் மின்னேரியா முகாமுக்குச் சென்றார்.

அங்கு விசேட மாநாடு நடத்திய பின்னர் நேற்றுப் பிற்பகல் அவர் வெலிஓயா சென்றார்.

அங்கு அவர் தங்கியிருந்த இடத்தை நோக்கி விடுதலைப் புலிகள் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் —

சுமார் பத்துக் குண்டுகள் அந்தப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன என்றும் —

படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் எவரும் காயமடையவில்லை என்றும் —

அமைச்சரும் முப்படைத் தளபதிகளும் அங்கிருந்து மின்னேரியா சென்று பின்னர் கொழும்பு திரும்பினர் என்றும் — படைத் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

இத்தகைய தாக்குதல்கள் தனது கடமையைச் செய்ய ஒரு போதும் தடையாக இருக்கமாட்டாது என்று அமைச்சர் ரத்வத்த கொழும்பில் செய்தி வட்டாரங்களிடம் கூறினார்.

ஒட்டுசுட்டான் பகுதி மீட்கப்பட்ட பின்னர் அங்கு ஜெனரல் ரத்வத்த சென்ற சமயம் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியதும் —

அத்தாக்குதலில் அவர் மயிரிழையில் தப்பியதும் — தெரிந்தவையே. (உ-3-6-21)

## தொண்டாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

ளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் எஸ். தொண்டமான் தலையீடு செய்வதாகவும்—

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாக அவர் செயற்படுவதாகவும்—

பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு தனது மனுவில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறந்த முறையில் செயற்பட்ட கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவரும்—

நுவரெலிய மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஒருவரும்—

அமைச்சர் தொண்டமானின் தலையீட்டால் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அந்த மனுவில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தாம் புலிகளுக்கு எதிரான இயக்கம் என்று தமது மனுவில் குறிப்பிட்டுள்ள அந்த அமைப்பு அமைச்சர் தொண்டமான் தமிழீழ ஆதரவு மாநாடுகளில் கலந்து கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக பொலீஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்அமைச்சர்எஸ்.தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (உ-6)

## தாவடிச்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளார்.

தாவடிப் பகுதியில் பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு பொதுமக்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் முறைப்பாட்டை அடுத்து தாம்அங்கு நேரில் சென்று விசாரணை நடத்தியதாகவும்—

அச்சமயம் தாம் தாக்கப்பட்டமை தொடர்பாகப் பலர் சாட்சியம் அளித்தனர் என்றும்—

சிறீதரன் ஜெனரல் மாரம் பேயிடம் தெரிவித்தார்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07 - 07 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org